www.padippakam.com

Raya

# இரண்டாவது பிறப்பு

RAYA
87 RUE DE COLOMBES
92600 ASNIERES SUR -
SEINE FRANCE



அருந்ததி

படிப்பகம்

www.padippakam.com

படிப்பகம்

www.padippakam.com

# இரண்டாவது பிறப்பு

அருந்ததி

ஆசியா

படிப்பகம்

www.padippakam.com

# இரண்டாவது பிறப்பு

## அருந்ததி கவிதைகள்

ஆசியா
3, Allee Paul Leautaud,
95200 Sarcelles.
FRANCE.

இரண்டாவது பிறப்பு

கவிதைகள் : அருந்ததி
முதற் பதிப்பு : மார்கழி 1990
வெளியீடு : ஈழம் கலைகள் சமூக விஞ்ஞானக் கழகம்
பிரான்ஸ்.
வடிவமைப்பு : தி. உமாகாந்தன்
கணனிபதிப்பு : செ. ராஜமோகன்
அட்டைப்படம் : சாம்சன்
பதிப்புரை : ஆசிரியர்
Poet by :
Published by : ASSEAY
(Art Social Sciences Of Eelam Academy)

ASSEAY
3, Alles Paul Leautaud,
95200 Sarcelles.
FRANCE.

படிப்பகம்

www.padippakam.com

RAYA
87 RUE DE COLOMBES
92600 ASNIERES SUR -
- SEINE ; FRANCE

# பதிப்புரை

எமதுதேசத்தின் மீது இனவாதஅரசினால் இழைக்கப்படும் கொடுமைகள் எல்லைகளைக் கடந்து கொண்டே போகின்றன. இனவெறிக்கும்...... இரத்த வெறிக்கும்இடையே அகப்பட்ட எமது மக்களின் வாழ்வு அகதி முகாம்களினுள்ளும், பதுங்கு குழிகளினுள்ளும் முடங்கிவிட்டது.

அதே சமயம் இதுவரை காலமும் எமது மக்களின் துன்பங்களையும் சிறீலங்கா அரசின் இனப் படுகொலைகளையும் சர்வதேச அரங்கில் பகிரங்கப்படுத்திய எம்மவர் பலரின் குரல்கள் தற்போது அடக்கப்பட்டுவிட்டன அல்லது அச்சம் காரணமாக அடங்கிவிட்டன. ஒரு புறம் ஆணவத்தனமான பயமுறுத்தல்களும் மறுபுறம் இப்போது பிரச்சனைகளை விலைக்கு வாங்காமல் கலை - இலக்கிய சேவை செய்து பின்னர் காலம் 'கனிந்து' வரும்போது அரசியல் களத்தில் புதிய முகமூடிகளுடன் இறங்குவதற்குக் காத்திருக்கும் கையாலாகதவர்களின் செயற்பாடுகளும் வெளிநாடுகளில் - வாழும் எம்மவர்கள் பலரை எம்மக்களின் துயரங்களிலிருந்து அந்நியப்படுத்துகின்றன.

இத்தகையதொரு இக்கட்டான சூழ்நிலையில் வெறும் வார்த்தைகளின் குவியல்களாக இல்லாமல்துன்புறும் எமதுமக்களின் வலிமுனகல்களையும்...... குமுறும் அவர்களது மனவுணர்வுகளையும் மாத்திரமன்றி சகல அடக்குமுறைகளையும் துணிவுடன் எதிர்த்து நிற்கும் எண்ணங்களையும் தாங்கி நிற்கும் அருந்ததி யின் கவிதைகளை வெளியிடுவதில் எமது ஆசியா நிறுவனம் பெருமையடைகிறது. இதுபோலவே தொடர்ந்து வரவிருக்கும் எமது வெளியீடுகளுக்கு உங்கள் ஆதரவையும் நாடுகிறோம்.

படிப்பகம்

www.padippakam.com

தனதுகவிதைகளை தொகுப்பாக வெளியிடஅனுமதித்த அருந்ததி அட்டை ஓவியத்தை வரைந்த சாம்சன், இத்தொகுதியை கணனி யின் மூலம் வடிவமைத்துத் தந்த ராஜமோகன் மற்றும் இக்கவிதை தொகுதி வெளிவர உறுதுணையாயிருந்த அனைவருக்கும் ஆசியா வின் நன்றிகள்.

சபா கோமதி

ஆசியா சார்பாக

படிப்பகம்

www.padippakam.com

# என்னுரை

எனது கவிதைகளைத் தாங்கி வெளிவருகின்ற இரண்டாவது நூல் இது. 'மக்கள் கலை இலக்கிய அமைப்பு' மூலமாக பிரசுரமான 'சமாதானத்தின் பகைவர்கள்' என்னும் எனது கவிதைத் தொகுதி 1987இல் வெளிவந்திருக்க வேண்டியது. அச்சடித்துப் பூரணமாகிய நிலையிலும் கடல்கடக்க மனமில்லாமல் தமிழ் நாட்டின் ஏதோ ஓர் அச்சக மூலையில் தூசுபடியத் தூங்கிக் கொண்டிருக்கின்றது. இதன்மூலம் 'இலக்கியம் வளர்க்கும்' சிலர் திருப்தி அடைகிறார் கள் என்பதால் அதனைக் குலைக்க நானும் விரும்பவில்லை.

'ஆசியா' நிறுவனம் இப்போது இத்தொகுதியை வெளியிட முன் வந்திருப்பது மகிழ்ச்சிக்குரியது.

இன்று எழுதுவதென்பதே தண்டனைக்குரிய மாபெரும் குற்றம் என் றாகிப் போனதோர் நிலை. 'சமூகப் பிரக்ஞை' என்பது கேலிக் குள்ளாக்கப்பட்டு, உயர்ந்த கலை, இலக்கியம் பற்றி ஆதங்கம் கொள்பவர்கள் பிழைக்கத் தெரியாதவர்கள் என்று மகுடமும்சூட் டப்படுகிறார்கள். சூழ்நிலையின் தாக்கம் பலரது கைகளை வேறு கட்டிப் போட்டிருக்கிறது. எனவே, 'தட்டிக் கொடுத்து எழுதுதல்' அல்லது எந்த விவகாரங்களிலும் 'மாட்டிக்கொள்ளாது' எழுதுதல் என்பதே இப்போதைய நிலையாக உள்ளது. இந் நிலையிலும் ஐரோப்பாவின் பல தேசங்களில் இருந்து 'நிமிர்ந்த நடையும் நேர்கொண்ட பார்வையுமாக' வெளிவரும் தமிழ் சஞ்சிகைகள் வெளியீடுகள் என்பவை நம்பிக்கையை விதைப்பதுடன் மாத்திர மல்ல, எதிர்காலம் பற்றிய எமது நம்பிக்கையை உறுதிப்படுத்து வனவாகவும் அமைகின்றன.

படிப்பகம்

www.padippakam.com

'எத்தகைய சூழ்நிலைகளின் தாக்கம் ஒருவனை எழுதத் தூண்டு கின்றனவோ அவைகளே தான் அவனது எழுத்துக்களுக்கும் கருப் பொருள்களாக அமைகின்றன' என்பதற்கு நானும் விதி விலக்கு அல்ல. எனினும் என் எழுத்துக்கள் பற்றிய மதிப்பீடுகள் எந்தள விற்கு என் எதிர்பார்ப்புக்கு நேரே நிற்கின்றன என்பதை இலக் கிய ஆர்வலர்கள்தான் கூறவேண்டும்.

இந்நூல் வெளிவரக் காரணமான 'ஆசியா' நிறுவனர் திரு. சபா லிங்கம், நண்பர் திரு. உமாகாந்தன், மற்றும் இந் நூலுக்கு பொ ருத்தமானதோர் அட்டைப்படம் வரைந்த திரு. சாம்சன் ஆகி யோர்க்கு நான் நன்றி கூறக் கடமைப்பட்டவன்.

பாரிஸ்- 14.11.90. -அருந்ததி-

படிப்பகம்

www.padippakam.com

# நம்பிக்கை

வானம் நிர்மலமாக........

மனசுக்குக் கிடைக்காத
வரப் பிரசாதம்,

நினைவுகளில்
இடறி வீழ்வதும்
எழுவதும் ......

இருள்காவு கொண்ட
வாழ்க்கை வெளிச்சங்கள்

தொலைவுகளில்
முகம் மறைக்கும் திரைகளுக்காக
நீளும் கைகள்,

வானம் தொடும் பூமியின்
தூரமாய்......
இருந்தும் இன்னம்
தளராதவைகளாய்........

புற்களும்
பூமியின் மைந்தர்களும்,

புதிது புதிதாக
இடறுவதும் எழுவதும்
உயிர்ப்பிலிருக்கும்
சில நாட்களுக்காய்..........


படிப்பகம்

www.padippakam.com

# இறந்தகாலங்கள்

அது ஒரு காலம் ,

ஒன்றில் , நிழல்கள் வழிநடத்தும்
இல்லையேல் பின் தொடரும் ,

நீயும் நானும்
எங்களோடு எல்லாமும் ,
கைகோர்த்து கையசைத்து ,
புலர்வதற்கும்
பொழுதுசாய்வதற்கும்
புதிது புதிதாக அர்த்தம் உண்டென்று
அறிவுறுத்தும் ..

குறுகிய வீதிகள் , சந்துகள்
மண் ஒழுங்கைகள் எல்லாமே
பதித்த எம் சுவடுகளை இன்னும்
பாதுகாத்துவைத்திருக்குமோ ?......

சின்னக்குடிசைக்குள்
உலகைவசப்படுத்திய
அந்தக் காலங்களில்தான்
நாம் நாமாக இருந்தோம் ,

பின்னர் நிஜங்களைத்தொலைத்துவிட்டு
நிழல்தேடி ... நிழல்தேடி ... ,

தெருவிளக்குக் கம்பத்தின் கீழும்


படிப்பகம்

www.padippakam.com

நிலாமுற்றத்திலும்
சுருதிமாறாத தாளலயத்துடன்
கரையைத் தழுவிச்செல்லும் சின்ன அலைகளில்
மெல்லிதாய் ஆடிக்கொண்டிருக்கும்
கட்டப்பட்ட தோணிகளிலும் ,
உலகமே சிறிதாகி
தெரிந்தும் தெரியாமலிருக்கும்தன்மை ,
சிலவேளைகளில் எம்மை
விழிகளை நிலைகுத்தவைத்து அதிர்ச்சிக்குள்ளாக்கியும் ,
ஆத்திரப்படவைத்தும் ,
விகாரமும் , அழகும் , அற்புதமும் தெரிய
வெளிப்படுத்தும் ,

சிரிக்கவும் , அழவும் , மகிழவும் வைத்துப் பார்த்த
அவைகள்
இன்னும். எம்மை தமக்குள்
எதிரொலித்துக் கொண்டிருக்குமோ ?......

தனித்தும் , கூடியும்
கலந்தும் ,
புழுதிபடிந்த உடலோடும்
புன்னகை மாறாத முகத்தோடும்
எமது வேர்களும் , விழுதுகளும்
எம்மைத் தாலாட்ட

எமக்குள் எம்மை நாமே இழந்த .....

அது ஒரு காலம் !

வாழ்வின் வலிமையை உணரும்போதே
தொலைந்துபோனது வாழ்க்கை .


படிப்பகம்

www.padippakam.com

கதவுகளும் மூடிக் கொண்டன,

விடைபெற்றுக் கொண்டவைகள்

காற்றும் வசந்தமும்

எல்லாமும்..........

இருந்தும்

இன்னும்......... இன்னும்....



படிப்பகம்

www.padippakam.com

# இரண்டாவது பிறப்பு

கரைந்து கொண்டிருக்கிறது காலம்
வெயில் நேரத்து
தெருக்களில் உறைந்த
பனிக்கட்டிகளைப் போல,

அழைப்புவிடுத்துத் தோற்றுப் போகிறது
வாழ்க்கை

பேதம் காணமுடியாத
இரவுகளும், பகல்களும்
அரங்கேற்றமில்லாத ஒத்திகைகளாய்
புதுப் புது முகங்களை
அணிந்து கொண்டு
நீண்டு கொண்டு போன
ஒவ்வொரு பொழுதுகளும்,

இங்கேயும்
நிலவும், வானும் காற்றும் மழையும்
ஆயினும் எங்கே ? .... எங்கே ?....

வாழ்க்கையை
ஆற்றிலே தொலைத்து
குளத்திலே தேடும் சுந்தரர்களாய்

இரண்டாவது பிறப்பெடுக்கத்
தற்கொலை புரிந்தவர்கள்


படிப்பகம்

www.padippakam.com

கண்களை விற்றுச் சித்திரம் வாங்கி
காட்சிப் பொருட்களாய்
நாமே மாறி
உலகமெங்கிலும்
உரக்கவே சொல்கிறோம்

வந்து பாருங்கள்
வந்து பாருங்கள்

இந்த நூற்றாண்டில் வாழும்
மூத்த பெரும்
பழங்குடி நாங்கள்



படிப்பகம்

www.padippakam.com

## வருக ! வருக ! தோழர்களே !!

தூசி தட்டி
புத்தகங்களை
துடைத்துவைத்திருக்கிறேன்,
தோழர்களே ! வருக !
வீதி பார்த்த முகப்பின்
ஜன்னல்களைத்
திறந்துவைத்தபடி
மேசை மீது அழகழகாக
பல வர்ண அட்டைகளோடு கூடிய
புத்தகங்களை,
பேப்பர்களை.....
இன்னுமென்ன
வருக ! வருக !
பேசுவோம்
அறிவைப் பெருக்குவதற்காகவா
இல்லை,
அது அறிவில்
குறைந்தவர்களுக்குத்தானே,
நாங்கள்
அனைத்தும் அறிந்தவர்களல்லவா,
எங்கள் புலமையினை
மேதாவிலாசத்தை
பறைசாற்றிக் கொள்வதற்காக
பேசுவோம்,
அரசியல்
தத்துவம்
பொருளாதாரம்


படிப்பகம்

www.padippakam.com

கலை

இலக்கியம்

விஞ்ஞானம்

இன்னும் இன்னும்.....

என்னவெல்லாம் இருக்கின்றதோ

அனைத்தையும் பேசுவோம்

அன்றொருநாள் -

'பியர்' கிளாசை ஏந்திய

விரல் இடுக்குகளில்

புகைந்துகொண்டிருந்த

சிகரெட்டை ஊதி இழுத்துவிட்டு

தூர கிழக்கின்

ஏதோவொரு பிரதேசத்தில்

தண்ணீர்ப் பஞ்சத்தால்

தவித்துச் செத்தவர்கள் பற்றியும்,

பின்னொரு நாளில்

'அகதிகாட்' கிடைத்த நண்பனின்

பிரமாதமான பார்ட்டி ஒன்றில்

'புரியாணியையும் அவித்த முட்டையையும்'

ஒரு கை பார்த்தவாறு,

மேற்கு வங்காளத்து உணவுப் பஞ்சத்தில்

பட்டினியால் செத்தவர்களை

புள்ளிவிபரத்தோடு

கணக்கெடுத்ததும்,

இன்னுமொரு நாள் -

சகோதரிக்குப் பார்த்த

இன்னியர் மாப்பிள்ளைக்கு

சீதனத்துக்காக

ஐம்பதினாயிரத்தை

தபாற் கந்தோர் ஊடாக அனுப்பிவிட்டு



படிப்பகம்

www.padippakam.com

காலாற நடந்துவரும்போது.....
சீதனக்கொடுமையால்
வட இந்தியாவில்
தீ மூட்டிக் கொல்லப்பட்ட
பெண்களைப் பற்றியும்,
யாழ்ப்பாணத்தில்
சீதனம் இல்லாமல்
முதிர்ந்து கொண்டிருக்கும்
கன்னியர்களைப் பற்றியும்,
கவலையோடு
விரிவாக கதைத்ததும்
யாருக்குவரும் இந்த சமூக பிரக்ஞை ?
குடும்பமாக இங்கு
குடியேறிவிட்ட பின்னரும்
தேசத்தை மறந்துவிடாமல்
மக்களுக்கு ஓய்வு தேவையில்லை
அவர்கள் போராட வேண்டுமென்று
கதைத்ததும்......
யாருக்குவரும் இந்த சித்தாந்த அறிவு ?
"வறுமையிலுள்ளவர்களுக்கு
சாப்பாடு போடுவது பிழை
அது அவர்களது போராட்ட உணர்வையே
மழுங்கடித்துவிடும்" என்று
மார்க்சையும், லெலினையும்
சாட்சிக்கு இழுத்துவந்து
நீங்கள் கதைத்தபோது
"அப்படியாயின்
உங்கள் குடும்பத்துக்காக மாத்திரம்
ஏன் நீங்கள் உழைக்கிறீர்கள்


படிப்பகம்

www.padippakam.com

அவர்களுக்கு போராட்ட உணர்வு

வரக்கூடாதா ?"

என்று

மடத்தனமாக நான் குறுக்கிட்டதும்

அதற்கு நீங்கள் தந்த

"தத்துவ விளக்கங்கள்"

அப்பப்பா........

எத்தனை பெரிய அறிவு ஜீவிகள் நீங்கள் !!

"நாட்டிலை இருந்து என்னத்தை

செய்து கிழிக்கிறார்கள் -

எம்மைப்போல

அறிவான விசயங்களையா பேசுகிறார்கள் ?"

நாம்

பேசுவோம்

நிறையப் பேசுவோம்

தத்துவம்

அரசியல்

கலை

இலக்கியம்

இன்னும் இன்னும்...

புத்தகமும்

அருந்த நல்ல பானமும்

இன்னும்

எல்லாமிருக்கிறது

தோழர்களே வருக ! வருக !!



படிப்பகம்

www.padippakam.com

# எதிரிகளல்லாதவர்கள்

இறந்துபோனவர்களோடெல்லாம்
கை குலுக்கி
இருப்பவர்களைத் தேடிய
என் விழிகளுள்ளே
முறிந்துகிடந்த முற்றத்து மரங்களின் கீழ்
அடையாளம் தெரியாது
சிதைந்து கிடந்த உடல்கள்
உதிரம் உறையவைத்தன,

அடுத்த வீட்டில் மூத்தவன்
தன் தம்பியின் கழுத்தை நெரித்துக்
கொலைசெய்துகொண்டிருந்தான்,

இன்னொரு வீட்டில் ஒருத்தன்
தன்தாயின் கைகளைக்
கத்தியால் வெட்டிக்கொண்டிருந்தான்,

பயங்கரம் !

என்னை நோக்கியும் கொலைக்கரங்கள்.....
ஆனால்
அதில் யாருமே என் எதிரிகளல்லாதவர்கள்,

கத்துவதற்கு வாயசைத்தாலும்
சத்தம் வர மறுக்கிறது,
ஓடுவதற்கும் முடியவில்லை
கால்களை இழுத்துவைத்து யாரோ
கட்டியது போல்.... நகரமறுத்தன,


படிப்பகம்

வியர்த்துக் கொட்டியது,
விழித்தொழுந்தேன் !
யன்னலினூடாக
உயர்மாடிக்கட்டிடங்கள்,
உடலை வறுத்தெடுக்கிறது கோடை
புளுக்கம்
மனசுக்குள்ளேயும்,
'பாஸ்போட்டும்' 'ரிக்கற்'றும்
விமானப் பயணமுமின்றி இப்படி
அடிக்கடி என்தாய் மண்ணில்
கால்கள் பதியும்,
விடிந்த பின்னும்
எதையோ பறிகொடுத்ததைப் போல்....
மூடிய விழிகளுள்ளும்
இரைமீட்டல் நிகழும்,
துண்டு துண்டாக , தலைகீழாக
பழுதடைந்த திரைப்படச் சுருள்போல்
எல்லாமே.....

எதை நினைத்து அழுவது ?
யாரைக் குறித்துக் கலங்குவது ?

வீட்டுக்குள்
பாம்புப் புற்றை வளரவிட்டு
'நாகபூசை' நடத்திப் பார்த்ததை
அறிவீனம் என்று
இப்பொழுது சொன்னால் எப்படி ?

எதிரியை நினைத்த நாட்கள்
என்றோ தொலைந்தன,

www.padippakam.com

கட்டி அணைத்தபோதும்
முதுகினில், தோள்களில்
கைபோட்ட போதும்
அவர் மடியில் 'கத்தி' இருக்கா, இல்லையா
என்பது குறித்து
ஆய்வு நடத்தவில்லையென்றா
கோபித்துக்கொள்ள முடியும் ?

எல்லா இலக்கணங்களும், தத்துவங்களும்
எம் தேசத்தில் மட்டும்
இப்படித் தலைகீழாக இருக்குமென்று
முன்கூட்டியே தெரியாமல் போனது
யாருடைய குற்றம் ?

இதில் பெருமைகள் வேறு
'பழம் பெருமைகள்',
வார்த்தைகளும், வண்ணத்தாள்களில்
பிரசுரங்களும்.....
வெட்கம்,

தேசம் கடந்தும் இங்கே
எதிரியும் , நண்பனும் தெரியா
வாழ்க்கை ,

ஓடிக்களைத்தென்ன
நிலவும் , வானும் எங்குதான் இல்லை ?

சுவாசப்பைகளிலும்
காற்று கறைபடிந்தே உள்ளது


படிப்பகம்

www.padippakam.com

## சுதந்திரம் ?

தினம் தினம் ஒவ்வொரு
கால்களின் கீழும்
எங்கள் சுதந்திரம்

சற்றே முதுகை நிமிர்த்தி
மூச்சுவிட்டு நிதானமாக
மீண்டும் மீண்டும்.....
ஒவ்வொரு நாளும்
ஒவ்வொரு கணமும்
கால்கள் வேறு கால்கள் வேறு
நாங்கள் ஒன்றே
நாங்கள் ஒன்றாகி.......
வாருங்கள் எல்லோரும்,

எங்கள்
கைகளை வெட்டியும்
நாக்கினைத் துண்டித்தும்

பேசவும்
எழுதவும்
உரிமைகள் தந்த
சுதந்திரமுண்டு சுதந்திரமுண்டு

எஞ்சிய இரண்டு
கண்களையும் இனி
எதற்கோ என்றே
பிடுங்கி எறியுங்கள்


படிப்பகம்

www.padippakam.com

இழப்பினில்தானே
உரிமைகள் கிடைக்கும்
இழப்போம் இழப்போம்
இன்பமாய் இழப்போம்

ஆனந்த சுதந்திரம்
அடைந்துவிட்டோமென்று.........


படிப்பகம்

www.padippakam.com

# புதிய வரைவிலக்கணம்

நான் இறந்துபோய்ப் பல நாட்களாகின்றன ,
எல்லாப் பருவகாலங்களும்
எனக்கு ஒரேமாதிரியாக இருக்கும்போதே
நிறங்கள் பூசிய முகங்கள் மட்டும்
வெள்ளையாய் , சிவப்பாய் , பச்சையாய்
இன்னும்.... இன்னும்....... வெவ்வேறாய்........

அப்போதும் நான் இருந்தேன் !

மனிதன் போலவும் , விலங்குகள் போலவும்
சில வேளைகளில்
இரண்டுமேயில்லா ஏதோவொன்று போலவும்
கனவில் துரத்தும் உருவங்களுக்கு மத்தியில்
பிடிபட்டும் பிடிபடாமலும்....
நடுவர்களில்லாத அந்த ஓட்டப் பந்தயத்தில்
அப்போது யாரும் ஜெயிக்கவுமில்லை
தோற்றுப்போகவுமில்லை ,

அப்போதும் நான் இருந்தேன் !

இலக்கியங்களின் வர்ணனைகளில்மாத்திரம்
அழகாகத் தெரிந்த காலைப் பொழுதுகளும்
மயங்கவைத்த மாலைப் பொழுதுகளும்
என்கால்களில் மிதிபட்டு உயிரிழந்துபோய்
பரிதாபமாக காட்சியளிக்கும் ,
தேய்ந்துபோகும் ஒவ்வொரு நாட்களும்
என் நிகழ்காலம் தொலைக்கும் ,


படிப்பகம்

www.padippakam.com

அப்போதும் நான் இருந்தேன் !

கற்பனைக்கும் நிஜத்துக்கும்
இலக்கியங்களுக்கும் வாழ்க்கைக்கும்
முரண்பாட்டைத் தொலைக்கும் என்முயற்சியில்
நாட்கள் உலர்ந்து அர்த்தங்கள் இழக்க
நானோர் கேலிப் பொருளாய் ஆன......

அப்போதும் நான் இருந்தேன் !
அர்த்தங்களைத் தொலைத்துவிட்டு
வெறும் வார்த்தைகளை மாத்திரம்
வைத்திருந்தவர்களோடு
என்தர்க்கங்கள் எல்லாமே
தாளம் தப்பிப் போக
என்னை நானே இழக்காத நிலையில்

அப்போதும் நான் இருந்தேன் !

எனக்குள் நம்பிக்கையிருந்தது ,
ஏடும் எழுதுகோலும்கூட
என்னோடிருந்தது
இழப்புகளிலும் கூட நான் மனிதன் என்ற
எண்ணம் இனித்தது ,
பேசவும் , எழுதவும் , சிந்திக்கவும்
அழவும் , சிரிக்கவும் , வாழவும் என்கின்ற
எனது ஜீவாதார உரிமைகள் எல்லாம்
என்னை மனிதன் என்று அங்கீகரித்தன ,

எவர் கொடுத்தார் இவ் அங்கீகாரம் ?...


படிப்பகம்

www.padippakam.com

என்காது கிழிபட கடுரமான
குரல்கள் வந்தன ,
திடுதிப்பென வானத்திலிருந்து நான்
பூமியில் வந்து விழுந்தேன்

யாதார்த்தம் உறைத்தது

என் கரமிருந்து எழுதுகோல் பறிக்கவும்
எனது வாய்க்கொரு பூட்டினைப் போடவும்
விரைந்துவந்தன பல கரங்கள் ,
சிறு வயதில் நான் கேட்ட
பேய்க்கதைகளை ஞாபகமூட்டும்
நீண்டு வளைந்த
நகங்கள் முளைத்த கரங்கள் ....

காரணம் கேட்க முடியவேயில்லை !
அவர்கள் , கை , கால் முளைத்த
துப்பாக்கிகளாகத் தெரிந்தனர் ,
தம்மை மீட்பர்கள் என்றனர்,

எனக்குப் புரியவில்லை ,

"மனிதன்" என்பதற்குப் புதிய
வரைவிலக்கணமும் கூறினார்கள் ,
"கைகட்டி , வாய்பொத்தி
கண்மூடி இருத்தல் , இன்னும் ... இத்தியாதி ...இத்தியாதி"

அன்றே நான் மரணித்தேன் !



படிப்பகம்

www.padippakam.com

# ஒரு மொழி ஆராய்ச்சி

பேரறிஞர்
பெரும்புலவர்
கவிஞர்களே !
சற்றே என் குரலுக்கு செவிசாய்க்க ,

நமது மொழியில்
புதியதோர் அகராதி செய்வோம் ,
அர்த்தங்கள் திரிபுபட்ட பின்னரும்
மீண்டும் மீண்டும்
பழைய அர்த்தங்களில் சொற்களையெல்லாம்
ஏன் ஆராதனை செய்யவேண்டும் ?
புரியவில்லை !
அர்த்தங்கள் சிதைந்து
புதியதாய் பரிணமிக்கும்
அழகான தமிழ்ச் சொற்கள்
இன்றோ அதிகம் .

'சுதந்திரம்' என்பது
பழைய கருத்திலே -
பேசவும் , எழுதவும் , வாழவும்
உரிமை
பெறுவதென்பது ,
இன்றோ அது புதிய அர்த்தத்தில் -
கைகளைக் கட்டி , வாயினை மூடி
மௌனித்திருப்பது , அல்லது
சும்மா இருப்பது என்பது .
'உரிமை' என்பது
பழைய கருத்திலே -


படிப்பகம்

www.padippakam.com

போராடிப் பெறுவதென்பது .
இன்றோ அது ,
தருவதைப் பெற்றுக் கொள்
அதற்கு மேலே கேட்டால் அடி விழும் என்பது.

" போராட்டம் " என்பது
பழைய கருத்திலே -
மானிட விடிவுக்காய் , பொது எதிரிக்கெதிராகப்
போரிடுவதென்பது ,
இன்றோ அது புதிய அர்த்தத்தில் -
எம்மை நாமே அடித்துக் கொண்டு
மடிவதென்பது.
" விடுதலை " என்பது
பழைய அர்த்தத்தில் -
சகல ஒடுக்குமுறைகளிலிருந்தும் விடுபடுவதென்பது ,
இன்றோ கருத்து இப்படியிருக்கு ,
அடங்கிப் போதல் , ஒடுங்கி வாழ்தல்
இல்லையேல் முடிவு மரணம் என்பது
இன்னும் இன்னும்
அர்த்தங்கள் மாறிய சொற்கள் இங்கே
ஓராயிரமுண்டு .
மொழி வளர
தேசம் செழிக்கவென
பணிபுரியும்
அறிஞரே , புலவரே , கவிஞரே !
கூடுங்கள் ஒன்றாய் ,
எதிர்காலச் சந்ததியும்
அறிந்து கொள்வதற்காய்
மாறிய அர்த்தங்களோடு
அழகு தமிழில்
புதிதாக ஓர் அகராதி செய்வோம்


படிப்பகம்

www.padippakam.com

## முகங்களும் திரைகளும்

இன்னும் என்ன இருக்கு,

கனவுகளைச் சேகரித்துவைத்திருந்த
பொக்கிஷங்களும் காலியாகின,

இலைகளையுதிர்க்கும் போதே
இங்கே துளிர்க்கும் நம்பிக்கையோடு
மரங்கள்,
ஒவ்வொரு பருவகாலங்களிலும்
ஒவ்வோர் உயிர்ப்பு,

எல்லாக் காலங்களையும் தொலைத்து
'நம்பிக்கை' மீதே
நம்பிக்கையிழந்து போக
சாகாவரம் பெற்றுவிட்டதாய்
கவலைகளும் , கண்ணீரும்.....

காலியாகிப்போன
எல்லா இதயங்களிலும் போர்வைகள்,
நிழல்கள்கூட வெறுப்பை
உமிழும்,

'ஈபிள்' கோபுரம் மாத்திரமல்ல
இங்கே எல்லாமே
கூனிக்குறுகிப் போய்விட்ட
எமக்கு முன்னால்
மிக உயரம்தான்,


படிப்பகம்

www.padippakam.com

ஆணிவேர் தறித்து
அலங்காரம் செய்து
எங்கெங்கோ
மரம்நாட்டினோம்,

முளைவிட்டவைகள் தவிர
கருகிப்போனவைகளும்
இவைகளில் அதிகம்,
சூரியன் இடம்பெயர்ந்துவிட்ட
பின்னரும்
எம்தேசத்தில் முளைவிடும்
விதைகள்,
இன்னும்எந்தக் காற்று
எங்கெல்லாம் அவைகளை
எடுத்துச்சென்று புதைக்குமோ,

கால்களை இழுக்கும்
பாரத்தினூடு
நாட்கள் அறுபடும்,

முகமூடி தொலைய
எல்லா மனிதரும் நிர்வாணமாயினர்,

இன்னும் என்ன ?

கல்லறைகளுக்குப்
பூச்சுப் பூசுவதற்கும்
வர்ணங்களைத் தொலைத்துவிட்டு
விழிகள் இமைக்க மறுக்கின்றன,


படிப்பகம்

www.padippakam.com

எல்லா முகங்களும்
எல்லாத் திரைகளும்
நாட்கணக்காக அழுக்கேறி......

எந்த உலகம் உன்னதமானது ?
எந்த வாழ்க்கை உயர்ந்தது ?

கேள்விகள் அனைத்தும்
அர்த்தங்கள் இழந்து போக
புத்தகங்களை
நெருப்புத்தின்கிறது.


படிப்பகம்

www.padippakam.com

## 'பள்ளிவாசல்'

ஊழிக்காலமொன்று வருக
எலும்புகளும், மண்டையோடுகளுமாக
உருமாறிப்போன என் பூமியிலிருந்து,
இரத்தம்பூசிய முகங்களோடு
'வெற்றி'க்கு விழா எடுக்கிறார்கள்,

மயானமையத்திலே
துப்பாக்கிகள்
மாலை, மரியாதைகளோடு
கொலுவிருக்க,
'கும்பாபிஷே'கப் பூசை
நடக்கிறது,

காத்தான்குடிப்
பள்ளிவாசலில்
எங்கள் மானுடக்
கனவுகள் அழிந்தன,

எமது வேர்களில்
எஞ்சியிருந்த
'மனித'மும்
அன்றுடன் தொலைந்து போனது,

இருளில் அன்று மூழ்கிப்போனது
'பள்ளிவாசல்' மாத்திரமல்ல
நிரந்தரமாக
எங்கள் தேசமும்,


படிப்பகம்

www.padippakam.com

கல்தோன்றி, மண்தோன்றாக்
காலத்து முன்தோன்றியதால்தான்
பின்னர் தோன்றிய
'கல்' எங்கள் இதயத்திலும்
'மண்' தலைக்குள்ளும்
புகுந்துகொண்டதோ,

படைத்தலும்
காத்தலும் இன்றி
'அழித்த'லை மட்டுமே
செய்பவரைப்
'பிரம்மாக்கள்' என்று
எந்த வேதம் உரைத்தது ?
'மாங்கனி' த் தீவினைச்
சுற்றியோடிய
கடலும் இன்று
வற்றிப்போனது,
கிழக்குமாகாண
வாவிகளெங்கும்
'பாடும் மீன்கள்'
ஒப்பாரி வைத்தன,

நம்பிக்கை வேரறுத்து
தலைசாய்த்தனர்
மக்கள்,

"மதத்தால் வேறுபடினும்
இனத்தால் , மொழியால்


படிப்பகம்

www.padippakam.com

ஒன்றென்றுரைத்த
உமது மனிதரெல்லாம்
எங்கே ஒளித்தனர்" ?...
என்ற
'நசீம் காத'ரின் கேள்விக்கு
'நல்லசிவம்' எந்த முகத்தோடு
பதிலை உரைப்பது ?

பயிர்களை அழித்து
களைகளை வளர்த்து
'சூரியன்' இல்லாத
பொங்கல் நடக்குது,

ஊழிக்காலமே வருக,

மானுடம் புதைய
குழிகள் தோண்டிய
கரங்களை வாரிச் செல்க,

குருதி உறைந்த
வீதிகள் துடைத்து
"தூய்மை" யை விதைத்துச்செல்க .


படிப்பகம்

www.padippakam.com

# அந்த " வேறொரு " மனிதன் "

அந்த மனிதனை இன்னொருமுறை சந்திப்பேன் ,

இறுதியாக என்னிடம் விடைபெறும்போது
அதற்கு முந்தியதாகவே
"புன்னகை" அந்த மனிதனிடமிருந்து
விடைபெற்றுப் போயிருந்தது ,

முகவரியில்லாத எனது எல்லாக்கடிதங்களும்
ஒரு நாள் விமோசனம் பெறுமென்று
இன்னும் பல பேர்
நம்பிக்கையைத் தங்கள்
தலைமீது சுமந்து திரிகின்றனர் ,

அந்த மனிதனை இன்னொருமுறை சந்திப்பேன் ,

அப்போது பூமி என் கால்களிலிருந்து
விலகிப்போயிருக்காது என்று
யாரோ என்காதுகளில் கிசுகிசுத்ததாக
ஒரு நினைவு ,
மனசு இலேசாக இருக்கும் ஒரு
அதிகாலைத் தூக்கக் கலையலில்
நிதானமாக விட்டு விட்டு அடிக்கும்
இதயத்தின் எல்லாத் துடிப்புக்களிலும்
இழந்துபோன அந்த மனிதனின் புன்னகையை
மீட்டுவரும் வலிமை இருக்குமென
தீர்க்க தரிசனமுரைக்கும்
என் கனவுகள் சொல்லுகின்றன ,


படிப்பகம்

www.padippakam.com

அந்த மனிதனை இன்னொருமுறை சந்திப்பேன் ,

அப்போது இயற்கையின்
எல்லா இயங்குதல்களும் 'சுருதி' சுத்தமாக
'அபஸ்வரம்' அற்றிருக்கும் என்று
இயற்கையின் எல்லாமே
எனக்குச் சத்தியமுரைத்ததாக
ஒரு ஞாபகத்தை எனது மூளை
ஒரு மூலைக்குள் பூட்டிவைத்திருக்கிறது ,

அந்த மனிதனை இன்னொருமுறை சந்திப்பேன் ,
அந்த 'இன்னொரு' நாள்
எந்த வருடத்தினதும் இறுதிநாளாக
அல்லது துவக்கநாளாக இருக்கலாமென
பத்திரிகைகள் செய்தி வெளியிட்டுள்ளன என்று
இறந்துபோன என் சிறுவயது நண்பன்
கனவில் வந்து சொன்னதாக
தூக்கமில்லாத ஒரு இராத்திரியில்
என் உணர்வுகள் உணர்த்தின ,

அந்த மனிதனை இன்னொருமுறை சந்திப்பேன் ,

எல்லோர் நாவிலும் , கரங்களிலும்
எம் தேசத்தின் எல்லா மூலைகளிலும்
மீண்டும் அந்த மனிதன் வந்தமர்வான் என்று தான்
கறையான்களிடமிருந்து பாதுகாத்துவைத்திருந்த
பழைய புத்தகங்களின்
எல்லா எழுத்துக்களுமே சொல்லுவதாக
அவற்றைத் தின்று தீர்த்த என் இன்னொரு நண்பன்
வாய்வழியாக அவைகளைக் கொட்டிக்காண்பித்தான் ,


படிப்பகம்

www.padippakam.com

அந்த மனிதனை இன்னொருமுறை சந்திப்பேன்,

நிச்சயமாக
அன்று தந்தியில்லாத வீணையிலிருந்து
செத்துப்போன ஒருபாடல் உயிர்த்தெழுமென்றும்,
அப்பொழுது வானம் இவ்வளவு
இருளைப் போர்த்தியிராது என்றும்,
எல்லாக் 'கழுகு' களும் தம் சிறகுகள் முறிய
எங்கோ விழுந்துகிடக்கும் என்றும்,
உதிர்ந்துபோன எல்லா மலர்களின்
சருகுகளிலிருந்தும் புதிது புதிதாக
அரும்புகள் வெளிவரும் என்றும்......


படிப்பகம்

www.padippakam.com

RAYA
87 RUE DE COLOMBES
92600 ASNIERES SUR -
-SEINE ; FRANCE

படிப்பகம்

www.padippakam.com

படிப்பகம்

www.padippakam.com

வெளியீடு

ஈழம் கலைகள் சமூக விஞ்ஞானக் கழகம்

படிப்பகம்